LIBRARY
22 DEC 2016
EASTERN UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருட இரண்டாம்அரையாண்டுகல்விமாணித் தேர்வு– 2012/2013 (2016 - மார்ச் /ஏப்ரல்)

## ED1212கல்வியும் மனிதவளஅபிவிருத்தியும் (Human resource development)

நேரம்: 02 மணித்தியாலங்கள்

பகுதி ஒன்றில் விரும்பிய இரு வினாக்களுக்கும் பகுதி இரண்டில் விரும்பிய ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.

---

### பகுதி–I

1. (அ) மனிதவள அபிவிருத்தி என்பதனால் நீர் விளங்கிக் கொள்வதனை உதாரணங்கள் மூலம் விளக்குக. (15 புள்ளிகள்)

   (ஆ) ஒரு நாட்டினுடைய முழுமையான வளர்ச்சியில் மனிதவள அபிவிருத்தின் செல்வாக்கினை ஆராய்க. (15 புள்ளிகள்)

2. அ) மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் கையாளப்படும் சில அடிப்படை உத்திகளைக் குறிப்பிட்டு, அவற்றை உதாரணங்கள் மூலம் விளக்குக. (15 புள்ளிகள்)

   ஆ) பாடசாலையானது சமூக, கலாசாரப் பாரம்பரியங்களை அடுத்த சந்ததியினருக்குக் கடத்துவதற்கு உருவாக்கப்பட்ட நிறுவனமாகும். இந்தவகையில் பாடசாலையானது சமூகத்திற்கு உதவக்கூடிய பல்வேறு வழிமுறைகளை ஆராய்க. (15 புள்ளிகள்)

3. அ) முரண்பாடு என்றால் என்ன என்பதனை விளக்கி, ஒரு நிறுவனத்தில் முரண்பாடுகள் ஏற்படுவதற்கான ஐந்து காரணங்களை ஆராய்க. (15 புள்ளிகள்)

   ஆ) ஆளணினரின் அபிவிருத்திக்கு முரண்பாடுகள் எவ்வாறு தடையாக அமைகின்றன என்பது பற்றிய உமது கருத்துக்களை எடுத்துரைக்குக. (15 புள்ளிகள்)

## பகுதி-II

4. "ஒரு நிறுவனம் பயன்தருவதாக அமைய வேண்டுமாயின் புதிய மாற்றங்களை உள்வாங்கி அமுல்படுத்த வேண்டியது அவசியமாகும்."

அ) மாற்றங்களை அமுல்படுத்தும்போது கையாளவேண்டிய உத்திகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) பாடசாலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும்போது எதிர்ப்புக்கள் தோன்றுவதற்கான காரணங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

இ) தனிமனித விருத்திக்கு மாற்றங்கள் ஏன் அவசியம் என்பதனை ஐந்து உதாரணங்கள் மூலம் விளக்குக. (10 புள்ளிகள்)

ஈ) மாற்றங்களை உள்வாங்குவதன் மூலம் ஏற்படும் இரு பிரச்சினைகளை ஆராய்க.

(10 புள்ளிகள்)

5. அ). நீர் வாழும் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் சார்பான குறைபாடுகளை இனங்கண்டு, அவற்றை நிவர்த்தி செய்வதற்கான உமது ஆலோசனைகளை முன்வைக்குக. (20 புள்ளிகள்)

ஆ) "ஒரு நாட்டினுடைய சமூக பொருளாதார அரசியல் அபிவிருத்தியில் தனியாளின் விருத்தி இன்றியமையாததாகும்." துனியாளை அபிவிருத்தி செய்வதன் மூலம் ஒருசமூகத்தை அபிவிருத்தி செய்யலாமா? உமது நியாயங்களை முன்வைக்குக.

(20 புள்ளிகள்)